## வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனி – 2016/2017

---

வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட தனியார் பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கம்பனியின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட குறிப்பு இலக்கம் 30 இன் பிரகாரம், கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட கொதித்த எண்ணைய்யின் உற்பத்திக் கிரயம் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. அதனால், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சானது கம்பனியால் ஏற்கப்படுகின்ற தொடர்ச்சியான நட்டத்திற்கான பரிகாரமாக ஒரு கம்பனியை மீள கட்டமைப்பதற்கு தீர்மானித்திருந்தது.

(ஆ) கம்பனியானது, 2017 யூன் 30 இலிருந்து 19,070 லீற்றரையும் 2017 மார்ச் 31 வரை 69,630 லீற்றர் எண்ணெயையும் உள்ளடக்கி 88,700 லீற்றர்கள் கொதித்த எண்ணெய்யை உற்பத்தி செய்தது. எனினும், 39,600 லீற்றர் கொதித்த எண்ணெய்யானது அத்தகைய உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக போதிய சந்தையின்மையால் ரூபா 40 விகிதத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(இ) உற்பத்தி செய்முறையை தொடர்ச்சியாக மேற்கொள்வதிலுள்ள தாமதத்தால் எதிர்பார்க்கப்பட்டவாறு உற்பத்தி இலக்குகளை அடைந்து கொள்ள முடிந்திருக்காததுடன் உற்பத்தியில் ஒவ்வொரு அலகிற்காக ரூபா 310 இல் உற்பத்திக் கிரயம் ஏற்படுத்தப்பட்டது.

(ஈ) 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு திறைசேரியிடமிருந்து ரூபா 240 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியிலுள்ளவாறு செயற்திட்டத்தால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,602,900 மாத்திரமேயாகும். 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியால் ஏற்கப்பட்ட நட்டம் ரூபா 35,174,148 தொகையானதுடன் அத்திகதியிலுள்ளவாறு திரட்டப்பட்ட நட்டம் ரூபா 134,221,029 ஆகவிருந்தது. இது 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நடைமுறைப் பொறுப்பானது நடைமுறைச் சொத்தை விட ரூபா 10,545,823 ஆல் அதிகரித்திருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) கம்பனியின் தலைவர் 2017 மே 23 இல் ஓய்வூதியம் பெற்றிருந்தது. தலைவரானவர் 2017 திசெம்பர் 12 வரையிலும் மீள நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பனியின் உத்தியோகத்தரின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கலான மூன்று உத்தியோகத்தர் ஓய்வூதியம் பெற்றிருந்ததுடன் அதற்கு எதிராக ஆட்சேரிப்புக்கள் நடைபெற்றிருக்கவில்லை.

**2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 962,044 கிரயமான 18 உருப்படிகள் முழுமையாக தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அவைகள் மேலும் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுக்களை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38**

நியமத்தின் 104 ஆம் பந்தியின் பிரகாரம், திடமான காலத்துடனான கற்பனைச் சொத்துக்களிற்கான காலக்கழிவு காலப்பகுதி மற்றும் காலக்கழிவு முறைமை ஒவ்வொரு நிதியாண்டு இறுதியளவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கேற்ப நடைபெற்றிருக்கவில்லை. அதனால், 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 252,944 பெறுமதியான கணனி மென்பொருள் முழுமையாக காலக்கழிவு செய்யப்பட்ட கணக்கு புத்தகங்களிலிருந்து நீக்கஞ் செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும், இது மேலும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட வழுக்களை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2014 மார்ச் 31 இலிருந்து 2017 மார்ச் 31 வரை பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 150,549,984 கூட்டுத்தொகை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடனாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட விடயத்தினை உறுதிப்படுத்துவதற்கான போதிய சான்றுகள் கம்பனியிடமிருந்தோ அல்லது பொதுத் திறைசேரியிடமிருந்தோ கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கும் மற்றும் கழிவுகளிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்ய பதிப்புரிமையை பெற்ற முதலீட்டாளர்களுக்குமிடையில் 2009 பெப்ரவரி 19 இல் கைச்சாத்திடப்பட்ட கூட்டுமுயற்சி உடன்படிக்கையின் 4.1 ஆம் பிரிவு மற்றும் வரையறுக்கப்பட்ட பொலிப்றோ லங்கா (தனியார்) கம்பனியின் அகவிதிகளின் 3.1(1)(i) ஆம் உறுப்புரிமை | (i) | பங்கொன்றிற்கு ரூபா 10 வீதத்திலான 18,750,000 சாதாரண பங்குகளை உள்ளடக்கி கம்பனியால் மூலதனம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய பங்குகளில் 10 மாத்திரம் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) | இலத்திரனியல் மற்றும் மீளாக் எரிசக்தி அமைச்சின் கீழுள்ள வரையறுக்கப்பட்ட பொலிப்றோ லங்கா (தனியார்) கம்பனியானது 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதிய வர்த்தமானியால் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சால் உடமையாக்கப்பட்டிருந்தது. எனினும், பங்குகளின் உரிமையாண்மையானது 2017 திசெம்பர் 31 வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 167 ஆம் பிரிவு | | வருடாந்த அறிக்கையின் பிரதியொன்று பங்குதாரர்களின் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்துவதற்கான திகதி நிச்சயிக்கப்படுவதற்கு முன்னர் 15 வேலை நாட்களை விட குறையாமல் கம்பனியின் ஒவ்வொரு பங்குதாரர்களுக்கும் வருடாந்த அறிக்கையின் பிரதி அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையை கம்பனி தயாரித்திருக்கவில்லை. |
| (இ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 1994 யூன் 14 இன் 95 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) | திறைசேரியினால் விஷேடமாக அங்கீகரிக்கப்பட்ட நன்மைகள் மாத்திரமே சபையின் கட்டுப்பாட்டின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட முடியும். அதற்கு முரணாக, ரூபா 177,668 தொகை இயக்குனர் சபைகளின் தீர்மானத்துடன் பல்வேறு படிகளாக 16 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | | (ii) பதில் பிரதி பொது முகாமையாளர் (நிதி) மற்றும் உள்ளக கணக்காய்வாளரிற்கான பதிலீட்டு படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 341,244 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2015 மே 25 இன் பீஈடீ 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக, ஒப்பந்த அடிப்படையில் சேவையிலுள்ள பிரதம பொது முகாமையாளருக்காக மீளாய்வாண்டில் போக்குவரத்து எரிபொருள் படிகளாக ரூபா 600,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 மே 25 இன் பீஈடீ 02/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | தொடர்பாடல் வசதிக்கு உரித்தில்லாத சாரதியொருவர், இரண்டு ஸ்தாபிப்பு உதவியாளர்கள், நெருப்பு அணைப்பு பயிற்சியாளர், பணிமனை முதல்வரொருவர், நிர்வாக மற்றும் உற்பத்தி உதவியாளரொருவர் மற்றும் திறமையுள்ள இரசாயனவியலாளரொருவர் போன்றோருக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குவதற்காக கம்பனியால் மீளாய்வாண்டின் போது ரூபா 102,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 24,918,651 தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 35,174,148 தேறிய நட்டத்தை விளைவித்திருந்தது. ஆகையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 10,255,497 பின்னடைவை மேலும் சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 1,602,900 தொகையான விற்பனை வருமானம் மற்றும் ரூபா 57,467 தொகையான ஏனைய வருமானம் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த போதிலும், விற்பனைக் கிரயம் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள் முறையே ரூபா 4,098,808 மற்றும் ரூபா 7,819,681 ஆல் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கு பிரதான காரணமாகவிருந்தது.

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளின் பகுப்பாய்வானது 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா 15,613,789 ஆகவிருந்த தேறிய நட்டமானது மீளாய்வாண்டில் ரூபா 35,174,148 க்கு அதிகரித்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நிதிசார் விளைவுகளிலுள்ள ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வை சீராக்கிய பின்னர் 2014/2015 ஆம் ஆண்டில் ரூபா 9,760,637 எதிர்மறை பெறுமதியாகவிருந்த கம்பனியின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 19,668,621 ஆகவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டின் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கழிவு பிளாஸ்ரிக் பொருட்களை எரிபொருளிற்கு மாற்றுவதன் மூலம் கழிவு பிளாஸ்ரிகினை தேவையற்ற முறையில் சூழலுக்கு வீசுவதை குறைத்தல், கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்பிற்காக முறையான வருமானத்துடன் ஒருவரை

இனங்காண்பதன் மூலம் பெற்றோலிய, எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு நாங்கள் செலவு செய்யும் வெளிநாட்டு நாணயமாற்று மில்லியன்களை சேமித்தல், தேசிய சொத்துக்களுக்கு புலமைச் சொத்துக்களை மாற்றும் அதேநேரம் இதை இளஞ்சமுதாயம் புத்தாக்க நினைவு மற்றும் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடுவதற்கான புதிய மாதிரியாக எடுத்தல், நேரடி தொழிற்சாலை வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை விட பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்புகளிற்காக சுயதொழில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கல் மற்றும் முச்சக்கர வண்டிகளிற்கான பொருளாதார எரிபொருளாக பயன்படுத்துவதற்காக பிளாஸ்ரிக் எரிபொருள் மாற்று செய்முறையூடாக ஏனைய துணைப் பொருட்களை உற்பத்தி செய்யும் சாத்தியத் தன்மை மற்றும் உற்பத்தி செய்யப்பட்டஎரிபொரளை முன்னேற்றுதல் தொடர்பாக மேலதிக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கற்கைகளை நடாத்துதல் மற்றும் உலக அரங்கில் இந்த தொழில்நுட்ப ரீதியான அதிசிறந்த கண்டுபிடிப்பை விரிவாக்கல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்றன நோக்கங்களாகும்.

(அ) பின்வரும் வேலைக் குறிகாட்டிகள் இந்தச் செயற்திட்டத்தின் இலக்குகளின் அடைதலிற்காக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் இது இடை வர்த்தக செயற்திட்டமாக நிறைவேற்றப்பட்டிருந்தது. 2016/2017 ஆம் ஆண்டின் வேலைக் குறிகாட்டிகளின் பிரகாரம், இலக்குகளின் அடைதல் பின்வருமாறுள்ளன.

(i) சுற்றாடலுக்கு கழிவு பிளாஸ்ரிக்களை அகற்றுதலினை தடுப்பதற்காக வருடாந்த பிளாஸ்ரிக் பாவனையாக 660,000 கிலோகிராம் இலக்கிடப்பட்டிருந்த போதும் 22,000 கிலோகிராம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால், இலக்குகளின் அடைதலானது 3.3 சதவீதமாக மாத்திரமிருந்தது.

(ii) பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பாக கிரயத்தை குறைப்பதனூடாக வருடாந்தம் ரூபா 30 மில்லியன் வெளிநாட்டு நாணயமாற்றை சேமிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அந்த எல்லையானது அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்வது தொடர்பாக செயற்திட்டத்தை அமுலாக்குவதில் முறையான கிரய நலன் பகுப்பாய்வை மேற்கொள்வதற்கும், உற்பத்திகளிற்கான சந்தையை இனங்காண்பதற்கும், இடை வர்த்தக செயற்திட்டமாக பைலோற் செயற்திட்டத்தினை அமுலாக்குவதில் ஏற்பட்ட தடைகள் மற்றும் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும், அத்தகைய பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக திட்டங்களை தயாரிப்பதற்கும் அமுலாக்குவதற்கும் தவறியமை போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை உரிய காலத்தில் நிதிகளை பெறாமை மற்றும் செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற உற்பத்தியின் மந்தமான முகாமைத்துவம் போன்ற காரணிகளால் அடையமுடியாதிருந்த செயற்திட்டத்தின் நோக்கங்களானது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளும் போது அவதானிக்கப்பட்டது.

(i) பிளாஸ்ரிக் கழிவுகளை எரிபொருளாக மாற்றும் செயற்திட்டம் தொடர்பாக சாத்தியவள கற்கையில் கிரய நலன்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதனால், ஒரு லீற்றர் எரிபொருளின் விற்பனை விலை ரூபா 40 ஆகவிருந்தது. எனினும், உற்பத்திக் கிரயம் ரூபா 350 ஆகவிருந்தது.

(ii) கொதிக்க வைக்கப்பட்ட எரிபொருளானது கொதிகலன்களிற்கான எரிபொருளாக மாத்திரம் பயன்படுத்தப்பட முடியுமென இனங்காணப்பட்டிருந்தது. எனினும், கொதித்த எரிபொருளினை விற்பனை செய்தல் சந்தையிலுள்ள பலமான போட்டி, பதிலீட்டு எரிபொருளின் பயன்பாடு மற்றும் பதீலீட்டு எரிபொருளின் (எண்ணெய்யின்) விலை போன்ற விடயங்களை கருதுவதை தவறியமையால் வெற்றிகரமற்றதாகவிருந்தது.

ஆகையால், கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட கொதித்த எரிபொருளான 88,700 லீற்றர்களில் விஷேட இயக்குனர் சபை படிவத்தின் பிரகாரம் லீற்றரொன்று ரூபா 40 வீதத்தில் 39,600 லீற்றர்கள் தனியார் நிறுவனமொன்றிற்கு விற்பனை செய்திருக்கவில்லை.

(iii) பைலோற் செயற்திட்டத்திடமிருந்து பெறப்பட்ட பெறுபேறுகளின் பிரகாரம், பிளாஸ்ரிக் கழிவகளை எரிபொருளிற்கு தொழில்நுட்ப ரீதியில், சமூக ரீதியில் மற்றும் பொருளாதார ரீதியில் வெற்றகரமாக மாற்றும் செய்முறையை தீர்மானிப்பதன் மூலம் தற்போதுள்ள இயலளவை விட பத்து மடங்குகள் அதிகமாக நடுத்தர வர்த்தக பொறியை வடிவமைப்பதற்கும் மற்றும் அமுலாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், இதனை அமுல்படுத்துவதில் தோன்றுகின்ற தடைகள் மற்றும் பிரச்சினைகள் இனங்காண்பதன் மூலமும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இடை வர்த்தக பொறிக்கு மாற்றிய பின்னர், அதற்கு தேவையான போதிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கும் அத்தகைய வசதிகளை முற்கூட்டியே பெறுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(v) இந்தச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில், ஆரம்பத்தில் பிளாஸ்ரிக்குகளை முறைமைக்குள் சேரப்பதற்கு முறையான முறைமை இல்லாதிருந்ததுடன் அவற்றுள் 05 முறைமைகள் இப்போது வரை பைலோற் செயற்திட்டத்திலிருந்து பரிசோதிக்கப்பட்டிருந்தது. தற்போது, பயன்படுத்திய எண்ணெய் மற்றும் அதனுள்ளே செய்முறையை கலப்பதுடன் பிளாஸ்ரிக்கானது முறைமைக்குள் சேர்க்கப்பட்டதுடன் பயன்படுத்திய எண்ணெய்யானது உற்பத்தி செய்யப்பட்ட கொதிக்க வைக்கப்பட்ட எண்ணைய்யின் அளவை விட அதிக அளவில் உள்ளீடுகளாகவிருந்தமையால் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்யானது முறைமைக்கு சேர்க்கப்பட்டிருந்தது.

கம்பனியானது 2017 மார்ச் 31 இலிருந்து யூன் 30 வரை கொதிக்க வைக்கப்பட்ட எண்ணெய்யின் 88,700 லீற்றர்களை உற்பத்தி செய்திருந்ததுடன் 95,200 லீற்றர்கள் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்யானது பிளாஸ்ரிக்குடனான நேரடி மற்றும் மறைமுக உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 1.07 லீற்றர்கள் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்யானது ஒரு லீற்றர் கொதிக்க வைக்கப்பட்ட எண்ணெய்யின் உற்பத்திக்கான உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) வரையறுக்கப்பட்ட பொலிப்றோ லங்கா (தனியார்) கம்பனியானது 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட முடியாதிருந்த மண்களுடன் கலந்திருந்த பிளாஸ்ரிக் பவுடரின் 3,494, கிலோ கிராமையும், உற்பத்திச் செய்முறையினூடாக அகற்றப்பட்ட 17,350 லீறிறர்கள் திரவக் கழிவுகளினையும் 2000 கிலோகிராம் திண்மக் கழிவுகளையும் சூழலுக்கு அகற்றுவதற்கு சாதகமான முறைமையின்மையால் கம்பனியின் தொட்டிகள் மற்றும் கொள்கலன்களில் சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அத்தகைய கழிவினை சமூக ரீதியில், நட்புறவு ரீதியில் மற்றும் சட்ட முறையில் அகற்றுவதற்காக கம்பனியால் முறையான செய்முறை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிளாஸ்ரிக் கழிவுகளை எரிபொருளிற்கு மாற்றுவதினூடாக தேவையற்ற முறையில் அகற்றப்பட்ட பிளாஸ்டிக்கால் ஏற்பட்ட சூழல் இடரை குறைக்கும் நோக்கில் 2009

ஆகஸ்ட் 19 இன் மத்திய சூழல் அதிகாரசபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொலிப்றோ லங்கா (தனியார்) கம்பனியானது 2010 ஒக்தோபர் 04 இலிருந்து 2013 பெப்ரவரி 06 வரையான காலப்பகுதியின் போது மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் இருந்தது. அதற்கு மேலதிகமாக, 2015 செப்தெம்பர் 21 இலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரையான காலப்பகுதி வரை இது பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் இருந்தது. மேலும், ஏனைய அமைச்சினால் கம்பனியின் கட்டுப்பாட்டை எடுத்தலானது கம்பனியின் செயலாற்றலை பாதித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மொறட்டுவ பல்கலைக்கழகமானது, கம்பனியின் பிரதான நோக்கமாகவுள்ள பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக தொழில்நுட்ப அறிவை வழங்குவதுடன் கம்பனியின் கூறப்பட்ட பங்கு மூலதனத்தின் 10 சதவீதத்தை உடமையாகக் கொண்டுள்ளது. எனினும், கம்பனியானது தனது ஸ்தாபிப்பு தொடர்பாக 2009 ஏப்ரல் 29 இல் கைச்சாத்திடப்பட்ட கூட்டுமுயற்சி உடன்படிக்கையில் மொறட்டுவ பல்கலைக்கழகமானது ஒரு தரப்பாக இருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்கான செயலாற்றலின் பிரகாரம், உற்பத்தி இலக்குகளின் அடைதலானது 5.6 சதவீதத்தை விட குறைவான மட்டத்திலிருந்தது. எனினும், 20 உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரத்திற்காக ரூபா 2,349,576 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 1,854,652 தொகை 12 நபர்களுக்கு செலுத்தப்பட்ட மேலதிக நேரமாகவிருந்தது. இந்த மேலதிக நேரமானது அவர்களுடைய வருடாந்த அடிப்படை சம்பளத்தின் 35 சதவீதத்திற்கும் 55 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலிருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) ஹொறனயில் அமைந்துள்ள அண்ணளவான 11 ஏக்கர்கள் பரப்பளவுள்ள கம்பனியின் காணியானது 3 வருடத்திற்கு ஒரு தடவை வாடகைளை திருத்தியமைக்கும் முறையில் வருடமொன்றிற்கு ரூபா 672,000 வீத அடிப்படையில் 50 வருட குத்தகை அடிப்படையில் 2011 யூலையில் இலங்கை முதலீட்டுச் சபையிடமிருந்து பெறப்பட்டிருந்தது. இதற்கான வாடகையாக 2017 திசெம்பர் 31 வரை ரூபா 4,379,864 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒரு ஏக்கரை பரப்பளவை விட குறைவாகவுள்ள இந்த முழுக் காணியின் பகுதியொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஹொறனயில் அமைந்துள்ள கொள்கலனிலுள்ள கொதித்த எண்ணெய் உற்பத்திக்கான நாளொன்றிற்கான பிளாஸ்ரிக்களின் சராசரி நுகர்வு 250 கிலோ கிராமாகவிருந்தது. 2017 மார்ச் 07 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படுகின்ற பிளாஸ்ரிக்களின் இருப்பு 5,546.50 கிலோகிராம் ஆகும். அத்தகைய இருப்பு 22 வேலை நாட்களுக்கு போதியதாக இருந்த போதிலும், 2017 மார்ச் 13 இல் ரூபா 52,198 கிரயத்தில் 2,670 கிலோகிராம் பிளாஸ்ரிக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அத்தகைய இருப்பு 2017 செப்தெம்பர் 15 இல் உள்ளவாறான 6,311 கிலோகிராம் இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், கொள்கலனின் உற்பத்தி நடவடிக்கைகள் 2017 யூன் 21 இலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்**

கம்பனியானது நடுத்தர வர்த்தக செயற்திட்டத்தைக் கொண்டிருந்த 2011 யூலை இலிருந்து பைலொற் செயற்திட்டத்திற்காக பயன்படுத்திய ரூபா 1,337,743 பெறுமதியான வெற்றிட பிரிவினானது பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது.

## 4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

2009 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை பதவியணி அலுவலர்களின் 05 பதவிகள், கல்விசாரா உத்தியோகத்தர்களின் 19 பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் உருவாக்கப்பட்டதுடன், அதற்காக உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக, அவ்வாறு வேலைக்கமர்த்தப்படாத 24 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 10,246,467 தொகையாகும்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்குகள் முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 137 நாட்கள் காலதாமதத்துடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொதுச் சுற்றறிக்கையின் 05(2) ஆம் பந்தியின் பிரகாரம் வணிகத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்து வரும் நிதியாண்டில் அமுல்படுத்துவதற்கு நோக்கமிடப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் மற்றும் கடன் மீள்கொடுப்பனவு திட்டம் போன்றவற்றை உள்ளடக்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 5.3 கணக்காய்வு குழு

2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அத்தகைய கூட்டங்கள் 2010 திசெம்பர் 14 இன் பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்க வேண்டும். எனினும், ஒரேயொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் மாத்திரம் மீளாய்வாண்டின் போது அத்தகைய ஏற்பாடுகளிற்கிணங்க நடைபெற்றிருந்தது.

## 06. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | கொடுப்பனவு கட்டுப்பாடு | சில கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதி பெற தவறியமை |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்களின் உள்ளகத்தன்மை பதிவேட்டை பேணாமை |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில்லாமை |